


06. 04. 2026

## தலைப்புச் செய்திகள்

1. தமிழ்நாட்டில் 234 சட்டப் பேரவை தொகுதிகளுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.

அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி K.பழனிச்சாமி,

பி. ஜே. பி. மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன்,

பி. ஜே. பி.-யின் டாக்டர் L. முருகன் உள்ளிட்ட ஏராளமானோர் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

2. வளர்ச்சியடைந்த சுய சார்பு பாரதத்தை உருவாக்குவதே பி. ஜே. பி -யின் நோக்கம் என்று கட்சியின் மூத்த தலைவர் திரு. நரேந்திர மோடி, அசாம் தேர்தல் பிரச்சாரத்தில் கூறியுள்ளார்.

3. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 100 சதவிகித வாக்குப் பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. மகளிரின் பாதுகாப்பை உறுதி செய்யும் சட்டங்களை பெண்கள் பயன்படுத்திக்கொள்ள தேசிய மகளிர் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

5. பைஷெக்கில் ஆசிய மல்யுத்த சாம்பியன் பட்டப் போட்டிகளில் இந்திய வீர வீராங்கனைகள் இன்று களமிறங்குகின்றனர்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல்

தமிழகத்தில் 234 சட்டப் பேரவை தொகுதிகளுக்கு வரும் 23-ம் தேதி நடைபெறும் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று மாலை
3 மணியுடன் நிறைவடைகிறது.

தற்போது வரை 3 ஆயிரத்து 761 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மனுதாக்கல் இன்று நிறைவடைவதால் பி.ஜே.பி. மற்றும் காங்கிரஸ் வேட்பாளர்களும், இதுவரை மனுதாக்கல் செய்யாத தி.மு.க., அஇஅதிமுக மற்றும் இதரக் கட்சிகளை சேர்ந்த எஞ்சிய வேட்பாளர்களும் மனுக்களை தாக்கல் செய்வதால் வேட்புமனு தாக்கல் களைகட்டியுள்ளது.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி, எடப்பாடியில் வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனுக்களை இன்று தாக்கல் செய்தார்.

கோவை வடக்கில் பி.ஜே.பி. வேட்பாளர் திருமதி. வானதி ஸ்ரீநிவாசன்,

அவினாசியில் பி.ஜே.பி. வேட்பாளர் டாக்டர் எல். முருகன்,

சாத்தூர் தொகுதியில் பி.ஜே.பி. வேட்பாளரும் அக்கட்சியின் மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோரும் இன்று வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

விருத்தாச்சலத்தில் தே.மு.தி.க. தலைவர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த்,

போடிநாயக்கனூரில் தி.மு.க.வின் திரு. ஓ. பன்னீர் செல்வம்,

மதுரை தெற்கில் ம.தி.மு.க.வின் திரு. பூமிநாதன்

பி.ஜே.பி. வேட்பாளர் திரு. ராமசீனிவாசன்

தர்மபுரியில் தே.மு.தி.கவின் டாக்டர் இளங்கோவன் உள்ளிட்டோர் மனுக்களை தாக்கல் செய்தனர்.

அரசியல் கட்சிகளை சேர்ந்த வேட்பாளர்கள் மனு தாக்கல் நடவடிக்கைகளில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

மனுக்கள் நாளை பரிசீலிக்கப்படுகின்றன.

அவற்றை திரும்பப் பெற வரும் 9-ம் தேதி கடைசிநாளாகும்.

❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் பிரச்சாரம்

தமிழகத்தில் தேர்தல் நடவடிக்கைகளும் சூடுபிடிக்க தொடங்கியுள்ளன.

தி.மு.க. இளைஞரணி தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் தஞ்சை மாவட்டம் பாபநாசத்தில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் வேட்பாளருக்கு ஆதரவாக இன்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

பெரம்பலூர் அருகே கவுள்பாளையத்தில் இன்றுமாலை அஇஅதிமுக வேட்பாளர்களை ஆதரித்து திரு. எடப்பாடி கே. பழனிச்சாமியும்,

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக இன்று காலை தே.மு.தி.க பொதுச் செயலாளர் திருமதி. பிரேமலதா விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டியுள்ளார்.

இத்தேர்தலில் தாம் சார்ந்துள்ள கூட்டணிக்கும் அஇஅதிமுக விற்கும் இடையேதான் போட்டி என்று கூறிய அவர், தேமுதி.க.வின் தேர்தல் அறிக்கை மகளிருக்கான அறிக்கையாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் புதுச்சேரி

இதனிடையே புதுச்சேரி யூனியன் பிரதேசம், அசாம், கேரளம் மாநிலங்களில் வரும் 9-ம் தேதி நடைபெறும் ஒரே கட்ட சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை முடிவடைவதால் அரசியல் தலைவர்கள் இப்பகுதிகளில் உச்சக்கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அசாமில் பி.ஜே.பி. மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டிய பி.ஜே.பி. மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, வளர்ச்சியடைந்த சுய சார்பு பாரதத்தை உருவாக்குவதே பி.ஜே.பியின் நோக்கம் என்றார்.

கடந்த 10 ஆண்டுகளில் தீவிரவாத அச்சுறுத்த சவால்களிலிருந்து அசாம் மீட்டெடுக்கப் பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் வாக்கு சேகரித்த காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கேரளத்தில் பி. ஜே. பி. மூத்த தலைவர் திரு. அமித்ஷா,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் திரு. பினராய் விஜயன்,

காங்கிரஸ் கட்சியின் திரு. ராகுல்காந்தி உள்ளிட்டோர் தத்தம் கட்சிகளை சேர்ந்த வேட்பாளர்களுக்கு ஆதரவாக இன்று வாக்கு சேகரிக்கின்றனர்.

புதுச்சேரியில் தி. மு. க. தலைவர் திரு. மு. க. ஸ்டாலின்

நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் உள்ளிட்டோரும் வாக்குகளை சேகரிக்கின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் மாவட்டம்

இந்நிலையில் 100 சதவிகித வாக்களிப்பின் அவசியத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மாவட்டங்களிலும் முழுவீச்சில் நடைபெறுகின்றன.

மயிலாடுதுறை மற்றும் அரியலூரில் தேர்தல் வாசகங்கள் அச்சிடப்பட்ட பிரம்மாண்ட பலூனை வானில் பறக்க விட்டு

மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திரு. ஸ்ரீகாந்த் மற்றும் திரு. ரத்தினசாமி விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

நீலகிரி மாவட்ட கடைக்கோடி மலை கிராமமான தெங்கு மரஹடாவில் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆட்சித்தலைவர் திருமதி. லக்ஷ்மி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது.

நாகையில் 100 சதவிகித வாக்களிப்பை வலியுறுத்தி மீனவர்கள் நடத்திய 4 கிலோ மீட்டர் தூர மாரத்தான் போட்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணாக்கர் கலந்து கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

சிவகங்கை

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை சார்பில் வாக்காளர் உறுதிமொழி இன்று ஏற்கப்பட்டது.

இதில் பங்கேற்ற, முதல் தலைமுறை வாக்காளர்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க கேட்டுக்கொண்டனர்.

.. மாணவிகள் வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

திருப்பத்தூர்

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு காவல்துறை சார்பில் பேருந்து

நிலையத்திலிருந்து துப்பாக்கி ஏந்திய காவலர்கள் பங்குபெற்ற கொடி அணிவகுப்பு இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

தேசிய மகளிர் ஆணையம்

மகளிரின் பாதுகாப்பை உறுதி செய்யும் வலுவான சட்டங்களை பெண்கள் பயன்படுத்திக் கொள்ள தேசிய மகளிர் ஆணையத் தலைவர் திருமதி. விஜய ரஹத்கர் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் ஆகாஷவாணி ஏற்பாடு செய்திருந்த மகளிர் ஆளுமை நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், பாலின சமத்துவத்தின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை தடுப்பு சட்டம் உள்ளிட்டவை நடைமுறையில் இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து பெண்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

மகளிர் அச்சமின்றி புகார்களை தெரிவிக்கும் வகையில் வலுவான கட்டமைப்பு, விழிப்புணர்வு, நம்பகத்தன்மை ஆகியவை மேம்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

நாட்டின் ராணுவ வீரர்களுக்கு சிறப்பான சுகாதார வசதிகள் வழங்குவதே மத்திய அரசின் உயர்முன்னுரிமை என்று பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதில்லியில் ராணுவ மருத்துவ வீரர்கள் நிறுவனநாளை ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர்,

மோசமான பருவ நிலைகளிலும், இரவு, பகல் பாராது இவ்வீரர்கள் நம் தேசத்தை பாதுகாப்பதாக பெருமிதம் தெரிவித்தார்.

இத்தகைய அளப்பரிய சேவையாற்றும் இராணுவ வீரர்கள் பயன்பெறும் வகையில் ஆராய்ச்சி உள்ளிட்ட மேம்பட்ட மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றார்.

ராணுவ வீரர்களுக்கு மருத்துவ சிகிச்சைகளை உறுதி செய்யும் வகையில் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் இத்தகைய சிறப்பு மருத்துவமனைகள் உருவாக்கப்பட வேண்டுமென்றார்.

ராணுவப் படை வீரர்களுக்கு சிகிச்சை அளிக்கும் ராணுவ செவிலியர் பிரிவினர் ஓய்வு பெறும் போது முன்னாள் படைவீரர்கள் அந்தஸ்து வழங்க உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

சி. பி. ராதா கிருஷ்ணன்

மாநிலங்களவைக்கு தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தி. மு. க. துணை பொதுச் செயலாளர் திரு. திருச்சி சிவா,

அ. இ. அ.தி.மு.க. மூத்த தலைவர் திரு. தம்பிதுரை

பா.ம.க தலைவர் டாக்டர் அன்புமணி,

தி.மு.க.வின் திரு. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்.

காங்கிரஸின் திரு. கிறிஸ்டோபர் திலக்,

தே.மு.தி.க. பொருளாளர் திரு. L. K. சுதீஸ் உள்ளிட்டோருக்கு மாநிலங்களவை தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் இன்று பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

குத்துச்சண்டை

பைஷெக்கில் நடைபெறும் ஆசிய மல்யுத்த சாம்பியன் பட்டப் போட்டிகளில் இந்திய வீர வீராங்கனைகள் இன்று களமிறங்குகின்றனர்.

ஒலிம்பிக் பதக்கத்தை வென்ற அமான் ஷெராவத் உட்பட 30 பேர் கொண்ட மல்யுத்த அணி 87, 65, 61, 57 கிலோ எடைப்பிரிவுகளில் போட்டியிடுகின்றனர்.

ஈரான், ஜப்பான், மத்திய ஆசிய நாடுகள் வலுவான நிலையில் களமிறங்கும் இந்த சாம்பியன் பட்ட போட்டியில், மகளிர் அணியில் மீனாட்சி கோயத், மனீஷா பன்வாலா உள்ளிட்டோர் போட்டியிடுகின்றனர்.

வரும் 12-ம் தேதி இப்போட்டிகள் நிறைவடைகின்றன.

❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தாவில் இன்று இரவு ஏழரை மணிக்கு கொல்கத்தா நைட்ரைடர்ஸ் – பஞ்சாப் கிங்ஸை எதிர்கொள்கிறது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை நிறைவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖